03 .03.2021

Case No.OS.252/2013

PW.1 - சுஜாதா – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் வீட்டின் சக்குபதி தெருவிற்கு கிழக்கு. கோபாலின் வீட்டின் தோட்டத்திற்கு மேற்கு என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வெங்கடேசன் வீட்டிற்கு வடக்கு. கோவிந்தராஜ் வீட்டிற்கு தெற்கு என்று சொன்னால் அது யார் என்று எனக்கு தெரியவில்லை. என்னுடைய வீட்டின் கதவு எண். 10/4 என்று சொன்னால் அது பழைய எண். இடம் காலியாக இருப்பதால் கதவு எண் எனக்கு தெரியாது. என் வீட்டிற்கு கதவு எண் இல்லை என்று சொன்னால் காலியாக உள்ளதால் கதவு எண் இல்லை. பெருமால் கோயில் தெரு என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா பெயர் பச்சையப்பன். அவர் என் அப்பா சின்ன வயதிருக்கும்போதே இறந்துவிட்டார். என் பாட்டி தற்போது உயிருடன் உள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார்தான் மூத்தவர் என்றும் பிரதிவாதி இளையவர் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா இறந்தபின்னர் எனது அப்பா , பிரதிவாதி எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்று சொன்னால் திருமணம் ஆகும்வரை ஒன்றாக இருந்தார்கள். என் சித்தப்பா கோவிந்தராஜிக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. என் சித்தப்பாவிற்கு திருமணம் ஆகும்வரை எனது அப்பாதான் குடும்பத்தை பராமரித்து வந்தார் என்று சொன்னால் இருந்திருக்கலாம். என் அப்பா, சித்தப்பா இருவருக்கும் விவசாயம்தான் தொழில் என்று சொன்னால் சரிதான்.